

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று முன்தினம் (29.06.2024) சைதாப்பேட்டை வார்டு 142, அபித் காலனியில் வயிற்றுப் போக்கினால் சிறுவன் இறந்ததைத் தொடர்ந்து, இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுகாதார நடவடிக்கைகளைப் பார்வையிட்டு மக்களிடம் கலந்துரையாடி வேறு ஏதேனும் பாதிப்புள்ளதா என்பதைக் கேட்டறிந்து ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் லால்வேனா, சென்னைப் பெருநகர் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானுரெட்டி, மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சேலம்-கோவையில் இந்த ஆண்டு பயன்பாட்டிற்கு வரும்!

# மதுரை அரசு மருத்துவமனையில் செயற்கை கருத்தரிப்பு மையம் விரைவில் தொடங்கப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல் !

சென்னை, ஜூலை 1-

சட்டப்பேரவையில் உறுப்பினர் ஆ.வெங்கடேசன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதிலும் வருமாறு:-

**ஆ.வெங்கடேசன்:** அரசு மருத்துவமனைகளில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் உயரிய சிகிச்சை வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்று காலையில்கூட ரூபாய் 13 கோடி செலவில், கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் அதிநவீன Biplane மூளை இரத்த நாள Cath Lab ஒன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இது இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் இன்றைக்கு பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. அதேபோன்று இன்று மதியம் கூட 10 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, மூளை இரத்த நாள Cath Lab ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இதுவும்கூட இந்தியாவிலேயே, அரசு மருத்துவமனையில் முதன்முதலில் பயன்பாட்டிற்கு வருகிற மருத்துவக் கருவி. எனவே, அந்த வகையில் முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின் படி, அதிநவீன தொழில்நுட்பக் கருவிகள் தமிழக அரசு மருத்துவமனைகளில் பயன்பாட்டில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆ. வெங்கடேசன்:** கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது அறிவிப்பு செய்த செயற்கை கருத்தரிப்பு மையம் (IVF) மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எப்போது முழு செயல்பாட்டிற்கு வரும் என்பதை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) மதுரை மட்டுமின்றி தென் தமிழகத்தில் ஏழை, எளிய விளிம்பு நிலை மக்களுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமையும் என்பதையும் இம்மன்றம் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** கடந்த ஆண்டு நிதிநிலை அறிவிப்புகளில், சென்னையிலும், மதுரையிலும் செயற்கை கருத்தரிப்பு மையங்கள் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த ஜூன் திங்கள் 7 ஆம் தேதி, சென்னை எழும்பூர் அரசு தாய்சேய் நல மருத்துவமனையில், செயற்கை கருத்தரித்தல் மையம் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் செயற்கை கருத்தரிப்பு மையம் ஒன்று அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது மிக விரைவில் தொடங்கி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் நேற்றைக்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றாக சேலம் மற்றும் கோவையிலும்கூட செயற்கை கருத்தரித்தல் மையங்கள் இந்த ஆண்டு பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாமன்ற உறுப்பினருக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலளித்தார்.

### குளச்சலில் மினி ஸ்டேடியம்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

# குமரி மாவட்ட மீனவர்கள் நெஞ்சார்ந்த நன்றி!

## கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை,ஜூலை.1-

குளச்சலில் மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று அறிவித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு குமரி மாவட்ட மீனவர்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்கள் என கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் தமிழ்நாட்டின் விளையாட்டுத்துறை பல மடங்கு முன்னேறிச் செல்கிறது. கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் விளையாட்டுத்துறையில் புது பாய்ச்சலை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு உத்வேகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டிற்கான கட்டமைப்பை மேம்படுத்தி வருகிறார். இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தைத் தூண்டுகிறார். விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான அனைத்து உதவி உதவிகளையும் செய்து கொடுத்து அவர்களின் சாதனைகளுக்கு உறுதுணையாக இருக்கிறார். விளையாட்டு வீரர்களின் சாதனையை, தமிழ்நாட்டின் சாதனையாகவும் மாற்றி வருகிறார்.

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளில், 38 தங்கம், 21 வெள்ளி, 39 வெண்கலம் என மொத்தம் 98 பதக்கங்களை வென்று ஒட்டு மொத்த பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கிறது தமிழ்நாடு. கேலோ இந்தியா பதக்கப் பட்டியலில், தமிழ்நாடு முதல் மூன்று இடங்களுக்குள் வந்தது இதுவே முதல்முறை. இது போன்ற சாதனைகளைத் தான் எங்களுடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்து வருகிறார். இந்தியா மட்டுமல்ல, ஒட்டு மொத்த ஆசிய கண்டமுமே உற்று நோக்குகின்ற வகையில், 7 ஆவது ஆசிய ஆண்கள் சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கிப் போட்டியை சென்னையில் கடந்த ஆண்டு நடத்தி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார். இதுபோன்று விளையாட்டுத்துறையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்த சாதனைகள் ஏராளம் உண்டு.

இதன் நீட்சியாக நடப்பாண்டிலும் விளையாட்டுத்துறையில் 24 புதிய அறிவிப்புகளை வெளியிட்டு இளைஞர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தையும் கவனத்தில் கொண்டு அறிவிப்புகளை வெளியிட்டிருப்பது எங்கள் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழர் பாரம்பரிய தற்காப்பு கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் புதியதாக அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, களரி, அடிமுறை, சிலம்பம் போன்ற தென் தமிழ்நாட்டின் பழமையான பாரம்பரிய தற்காப்பு கலைகளும் அவற்றின் உட்பிரிவுகளான சுவடுமுறை, மல்யுத்தம், குத்துவரிசை, அடிதடை, வர்மம் போன்ற அரிய கலைகளையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் சீரிய நோக்கில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழர் பாரம்பரிய தற்காப்பு கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் புதியதாக அமைக்கப்படும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

விளையாட்டு கட்டமைப்புகளைப் பரவலாக்கம் செய்யும் வகையில், விளையாட்டு அரங்கங்கள் இல்லாத சட்டமன்றத் தொகுதிகளில் தலா ஒரு மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு முதற்கட்டமாக 9 சட்டமன்றத் தொகுதிகளில் மினி ஸ்டேடியம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக முதலமைச்சருடைய மினி ஸ்டேடியம் திட்டத்தின் கீழ் 22 சட்டமன்றத் தொகுதிகளில் சிறு விளையாட்டரங்கங்கள் ரூ. 66 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் ஆரோக்கியமான, சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை ஏற்படுத்துவதையும், சமூகத்தில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி கலாச்சாரத்தை வளர்ப்பதையும் நோக்கமாக கொண்டிருக்கும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கன்னியாகுமரி மாவட்டத்தின் குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலும் இந்தாண்டு சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்படும் என அறிவித்திருக்கிறார். இதுபோன்ற திட்டங்கள் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு பெரும் உதவியாக இருக்கும்.

இதற்காக கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பாகவும், கழக மீனவரணி சார்பாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அ.ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட கழகத்தினர் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அன்னியூர் ஏ.சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட ஈச்சங்குப்பம் ஊராட்சியில் பாகம் எண் 145ல் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி 5 வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் தலைமையில் செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் ஆர்.சுரேஷ் ஈச்சங்குப்பம் கிளை கழக செயலாளர்கள், தலைவர் கே. அரிகிருஷ்ணன், பி.ஏழுமலை, ஆகியோர் வீடு வீடாக சென்று தீவிர வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டபோது. உடன் கி.வேல்மணி, இரா.செல்வகுமார், ஆர்.செல்வகுமார், வி.கார்த்திக், வே.சிவசுப்பரமணியம், எ.லோகேஷ், விஜிசிவகுமார், கே.ரமேஷ், மு.வினோத், டி.திவகர், எஸ்.கார்த்திக், எம்.குட்டி, எம்.தாஸ், சந்தோஷ், எ,நவீன்குமார், ஜெ கிருபா எல், எம்.சக்தி, பிரபா, ஹரிஹரன், தே.மனோஜ் மற்றும் கழக தோழர்களும் பெரும் திரளாக பங்கேற்றனர்.





விக்கிரவாண்டி இடைத்தேர்தல் விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் நந்திவாடி ஊராட்சி 137வது பாகம் பல்லாவரம் வடக்கு மற்றும் தெற்கு பகுதி மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் நடைபெறும் தேர்தல் களப்பணிகளை தேர்தல் பணி பொறுப்பாளர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ அன்பரசன் மற்றும் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ ஆகியோர் நேரில் வருகை தந்து தேர்தல் பணிகளை ஆய்வு செய்தார்கள். அப்பொழுது பாக தேர்தல் பொறுப்பாளர்கள், பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர், மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பல்லாவரம் தெற்கு கழக செயலாளர் இ. எஸ்.பெர்னார்ட் ஆகியோர் தேர்தல் பணிகளை விளக்கினர். உடன் க.ரமேஷ், ச.சிவகுமார், ஜெ.வி. சந்திரசேகர், ஜி. கருணாமூர்த்தி, கோ.ஜானகிராமன், ஜெ.இன்சாமாம், எம்.இளவரசன், எல்.டில்லி பாபு, எம்.கமல்ராஜ், பி.கிஷோர், ஏ.டீசல் ராஜா மற்றும் நந்தி வாடி ஊராட்சி கழக செயலாளர் டி.சாரதி, நிர்வாகிகள் ஆகியோர் உள்ளனர்.

### உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி

# பாலாற்றின் குறுக்கே அவளூர் - காலூர் பகுதியில் தடுப்பணைகள் கட்டுக!

## சட்டப்பேரவையில் க.சுந்தர் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 1-**

**சட்டப்பேரவையில் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் பாலாற்றின் குறுக்கே அவளூர், காலூர் பகுதிகளில் தடுப்பணைகள் கட்டிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.**

**இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-**



**க.சுந்தர்:** அமைச்சர் அவர்கள், பதிலுரையில் நிறைய அணைகள், தடுப்பணைகளை கட்டுவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருவதாக தெரிவித்து இருக்கின்றார்கள். நமது உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதியில் பாலாறும். செய்யாறும் ஓடிக் கொண்டிருக்கின்றன. பாலாற்றின் குறுக்கே அவளூர், காலூர் பகுதியிலே அதைப் போலவே, செய்யாற்றின் குறுக்கே ஒழுகலல பகுதியிலே தடுப்பணைகள் கட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் துரைமுருகன்:** பொதுவாக உறுப்பினர்கள், என்னையும் சேர்த்தே சொல்லுகிறேன். பெரிய கோரிக்கை தங்கள் தொகுதியிலே தடுப்பணைகள் அமைத்து, தண்ணீரை தேக்கி, அதை RECHARGE செய்து விவசாயத்திற்கும், கால்நடைகளுக்கும், ஏன் குடிநீருக்கும்கூட பயன்படுத்துவதற்கு வகை செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருப்பதனால்தான், ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட நிதிநிலைகளி லிருந்து கூடுமானவரை யில், இந்தத் தடுப்பணைகளைக் கட்டுவதற்கு முயற்சிக்கிறோம். ஆகையினால், முதலமைச்சர் அவர்களிடத்தில் இது பற்றி நான் பேச இருக்கிறேன். வேறு திட்டங்கள் எழுப்பப்படாவிட்டாலும், குறிப்பாக தமிழ்நாட்டில் இந்த இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளாக உறுப்பினர்கள் குறிப்பிடுகிற தடுப்பணைகளையாவது கட்டி முடிக்க வேண்டுமென்று நான் ஈடுபட்டிருக்கிறேன். முடிவெடுத்திருக்கிறேன். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.





விழுப்புரம் தெற்கு மாவட்டம், ஜெயராம் மண்டபத்தில், நேற்று (30.6.2024) விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் ஒதுக்கப்பட்ட பாகங்கள் 227, 228, 229,230, 231 ஆகிய பகுதிகளில் உள்ள பொது மக்களிடம் வெற்றி வேட்பாளர் அன்னியூர் ஏ.சிவாவை ஆதரித்து வாக்கு சேகரிப்பது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளருமான பி.கே.சேகர்பாபு மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு கழக நிர்வாகிகளிடம் ஆலோசனைகளை வழங்கினர். இக்கூட்டத்தில் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் சபா.இராஜேந்திரன், ஜோசப் சாமுவேல், சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், விழுப்புரம் நகர செயலாளர் சர்க்கரை, விக்கிரவாண்டி நகர செயலாளர் நைனார் முகமது, நகரத் தலைவர் அப்துல் சலாம், பகுதி செயலாளர்கள் ஐசிஎப்.வா.முரளிதரன், எம்.நாகராஜன், டிஎஸ்பி.இராஜகோபால், எம்.டிஆர்.நாகராஜ், சொ.வேலு, கூ.பீ.ஜெயின், வே.வாசு, வி.சுதாகர், எஸ்.முரளி, ராஜசேகர், பிகே.மூர்த்தி, கேஎஸ்எம்.நாதன், எம்.விஜயகுமார், மாமன்ற உறுப்பினர்கள் சாந்தகுமாரி, நாகவல்லி, ராஜேஸ்வரி ஸ்ரீதர்,சுதா தீனதயாளன்,சாரதா, எம்.இ.சேகர், பூர்ணிமா, உமா சந்தானம், அமுதா ஆகியோர் உள்ளனர்.